**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பிரபு** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02 day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி காணொலி காட்சி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையம் காந்திநகரில் குடியிருந்த வருகிறேன். நான் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக உள்ளேன். முருகேசனை எனக்கு தெரியாது. மூலிமங்கலம் பிரிவில் உள்ள டாஸ்மாக் கடை முன்புறத்தில் ஒரு கொலை நடந்தது. எனது ஆம்புலன்ஸ் கொலை நடந்த இடத்திலிருந்தது. நான் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு சென்றிருந்தேன். என் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் 1 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். சிறயையிலிருந்து வரும்

காணொலி காட்சியில் வந்த மணிகண்டன் என்ற கூல்மணி ஆஜராகியுள்ளார். (சாட்சி அவரை பார்த்து விட்டு) யாரென்று தெரியாது. மற்றொரு எதிரி உதயநிதியை யாரென்று எனக்கு தெரியாது. நான் பார்த்ததில்லை. கலையரசன், பிரசாத், பிரசாந்த் ஆகியோர் என் ஊரிலிருந்து 3 கிலோமீட்டர் தள்ளியுள்ளார்கள். அவர்களை பார்த்துள்ளேன் எனக்கும் அவர்களுக்கும் பழக்கமில்லை. சம்பவத்தன்று நீங்கள் கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தோவுத், கோகுல்நாத் கூல்மணி, சூர்யா ஆகியோர்களை பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. நீங்கள் ஆம்புலன்ஸ் நிறுத்தும் இடத்திற்கு அருகில் ஹாலோபிளாக் கம்பெனி அருகில் பார்க்கவில்லை. நீங்கள் 16.12.2020 ஆம் தேதியன்று பகல் 12.00 மணிக்கு கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தோவுத், கோகுல்நாத் கூல்மணி, சூர்யா ஆகியோர்களை வேலாயுதம்பாளையம், மூலிமங்கலம் பிரிவு ஹாலோபிளாக் கம்பெனி அருகில் பார்த்தீர்களா என்றால் இல்லை.

**மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை**

கடந்த 16.12.2020 ஆம் தேதி கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தோவுத், கோகுல்நாத் ஆகியோர்கள் ரஞ்சித்குமாருடன் மூலிமங்கலம் பிரிவில் உள்ள ஹாலோபிளாக் கம்பெனியில் மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. மேற்சொன்ன நபர்களுக்கும் ரஞ்சித்குமாருக்கும் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் நான் பார்க்கவில்லை. 17.12.2020 அன்று மாலை 4.30 மணிக்கு வேலாயுதம்பாளையம் பைபாசில், மூலிமங்கலம் பிரிவில் உள்ள 91 காபி கபே கடையின் முன்புறம் ரஞ்சித்குமாரை கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தோவுத், கோகுல்நாத், கூல்மணி, சூர்யா ஆகியோர்கள் ரஞ்சித்குமாரை கொலை செய்த விவரத்தை கேள்விப்பட்டு காவல்துறையினர் மேற்சொன்ன

நபர்களை கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருந்தவர்களை நீங்களம் முருகேசனும் அங்கு சென்று அடையாளம் காண்பித்தீர்கள் என்றும் அப்போது 16.12.2020 ஆம் தேதி நடந்த விவரத்தை காவல்துறையினர் விசாரணையின் போது கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:38:17 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW17**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சுரேஷ்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02 day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி காணொலி காட்சி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையம், முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட மேஸ்திரியாக உள்ளேன். நவீன்குமார் எனது சகோதரர். பிரசாந்த், பிரசாத் ஆகியோர் எங்கள் பகுதியை சார்ந்தவர்கள் அவர்களை எனக்கு தெரியும். TN 47 AQ 8502 என்ற பிளாட்டினா இருசக்கர வாகனம் என்னுடையதுதான். என் தம்பி நவீன் வண்டி சாவியும், எனது வண்டி சாவியும் வண்டியிலேயே இருக்கும். என் தம்பி நவீனின் வாகனம் splender

வாகனம் ஆகனம். TN 48 J 1796 என்ற பதிவெண் கொண்ட வாகனம்ள ன் தம்பி நவீனின் வாகனம் ஆகும். அந்த வாகனத்தின் புகைப்படம் இதுதான். அந்த வாகனத்தின் புகைப்படங்கள் அ.சா.ஆ.33 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய TN 47 AQ 8502 பதிவெண் கொண்ட வண்டியின் புகைப்படங்கள் இதுதான். அது அ.சா.ஆ.30 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரஞ்சித் கொலையுண்ட இறந்தநநாளன்று நான் மீனாட்சி மஹாலில் வேலை செய்து வந்தேன். என் சகோதரர் நவீன்குமார் பக்கத்தில் சிமெண்ட் செட் அருகில் வண்டியை விட்டிருந்தார். அதிலேயே சாவி இருந்தது. அங்கே நான் மது அருந்திவிட்டு படுத்துவிட்டேன். வண்டி யார் எடுத்துச்சென்றார்கள் என்று தெரியாது. 2 நாட்கள் கழித்து தான் காவல்துறையினர் கூறித்தான் என் வண்டியை எடுத்துச்சென்ற விவரம் எனக்கு தெரியும். காவல்நிலையத்தில் என்னுடைய மேற்சொன்ன இருசக்கர வாகனம் இருந்தது. காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். பிரசாத், பிரசாந்த் என்னிடம் வேலை செய்யவில்லை எனக்கு தெரிந்த நபர்கள்.

**மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை**

பிரசாத், பிரசாந்த் ஆகியோர் அவர்களுக்கு வண்டி தேவைப்படும் போது உங்களிடம் வந்து உங்கள் வண்டியை எடுத்துச்செல்வார்கள் என்றால் சரியல்ல. பிரபு மகன் பிரசாத் உங்களுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துச்செல்ல உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் அம்மாவிடம் கேட்டு எடுத்துச்சென்றார் என்ற விவரம் என் தம்பி நவீன் சொல்லி எனக்கு தெரியவந்தது. உங்கள் தம்பி நவீனின் வண்டியை பிரசாந்த் எடுத்துச்சென்றார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிரசாத், பிரசாந்த் உங்களிடம் வேலை செய்து வந்தார்கள் என்று

போலிசார் விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரசாத், பிரசாந்த் ஆகியோருக்கு வண்டி தேவைப்படும் போது உங்களிடம் வந்து வண்டியை எடுத்துச்செல்வார்கள் என்றால் சரியல்ல. எதிரி உங்களுக்கு நண்பர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்த பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:38:25 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.